| Name of the newspaper | Tamil Sudar |
|---|---|
| Date | September 8, 2015 |
| Event | World Duchenne Awareness Day 2015 |

# கோவையில் தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினம்

கோவை, செப். 8-

மாலிகுலர் டயாக்னாஸ்டிக் கவுன்சிலிங் கேர் அண்ட் ரிசர்ச் சென்டர் என்பது ஒரு தொண்டு நிறுவனம். இது டாக்டர் லட்சுமி தலைமையில் இயங்கும் இலாப நோக்கம் இல்லாத அறக்கட்டளை. இந்நிறுவனம் பொதுமக்களின் நலத்திற்காக குறிப்பாக டுசீன் தசை சிதைவு நோய் மற்றும் தண்டுவட தசை சிதைவு நோய் ஆகிய இருநோய்களில் அதிக கவனம் செலுத்தி இயங்கி வருகிறது. இரு மரபு சார்ந்த உயிர்கொல்லி நோய்களுக்கும் இதுவரை மருந்து கண்டுபிடிக்கப்படவில்லை. டி.எம்.டி.என்பது ஆண் குழந்தைகளை மட்டுமே தாக்கும் ஒரு மரபியல் நோய். இந்த நோய் தாக்கம் உள்ள குழந்தைகளை மகிழ்விக்க உலக தசை சிதைவு நோய் விழிப்புணர்வு தினத்தையொட்டி பல்வேறு விளையாட்டு பொழுது போக்கு நிகழ்ச்சிகளை எம்டிசிஆர்சி தொண்டு நிறுவனம் கோவை ஜென்னிஸ் கிளப்பில் நடத்தியது. இதில் தசை சிதைவு நோய் தாக்கம் உள்ள 50-க்கும் மேற்பட்ட குழந்தைகள் கலந்து கொண்டனர். விழாவில் கோவை ஆர்ய வைத்திய பார்மஸி நிர்வாக இயக்குனர் டாக்டர் பி.ஆர். கிருஷ்ணகுமார், குறிஞ்சி ஆஸ்பத்திரி தலைவர் டாக்டர் கே.சி.ராமசாமி, ஸ்வர்கா பவுண்டேசன் நிர்வாக அறங்காவலர் சுவர்ணலதா,உள்பட பலர் கலந்து கொண்டனர்.

குழந்தைகளுக்கான மேஜிக் ஷோவை ராஜா, பலூன் ஷோவை நாகலெட்சுமி நடத்தி குழந்தைகளை மகிழ்வித்தனர். இது தவிர குழந்தைகள் பங்கு பெறும் பொம்மை கார் போட்டியும் நடைபெற்றது. அதில் வெற்றி பெற்ற குழந்தைகளின் கார்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.